.

DEPOSITION OF WITNESS

(Chapter XXXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | |
|---|---|
| Calendar | **C.C.No.277/2010** |
| Miscellaneous | **C.M.P.No** |
| Sessions | **S T C No.** |
| Deposition of witness for | **Prosecution** <br> **Defence** <br> **Court** |

Name சந்தியா

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

26.02.2019 அ.சா.4

**முதல் விசாரணை**

நான் கருமாண்டிசெல்லிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். பெருந்துறையில் உள்ள ராதா வெள்ளி மஹாலில் நான் வேலை பார்த்து வருகிறேன். 06.10.2009-ம் தேதி மதியம் 1.30 மணிக்கு கடையில் நான் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது எங்கள் கடைக்கு 5 பெண்கள் நகைகளை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதில் ஒரு பெண் 107 ஐதை கொண்ட கொலுசை எடுத்துக் கொண்டார். அவர் கொண்டு வந்த ஒயர் கூடையில் எடுத்து வைத்துக் கொண்டு சிறிது நேரம் கழித்து போய்விட்டார்கள். 1 மணி நேரம் கழித்து எங்கள் கடையில் பொருத்தியிருந்த கேமராவை பார்த்து நகைப் பெட்டிகளையும் எண்ணிப் பார்த்தபொழுது 1.50 லட்சம் மதிப்புள்ள 1 வெள்ளி கொலுசு பெட்டி காணாமல் போனது தெரிய வந்தது. எங்கள் கடைக்கு வந்த பெண்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும் மேலும் அந்த நகைப் பெட்டியை எடுத்து வந்த பெண்ணை பார்த்தாலும் அடையாளம் சொல்ல முடியும்.( எதிரிகள் ஆஜரில்லை. கு வி மு ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.) கடையின் ஓனர் சத்தியமூர்த்தி பெருந்துறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். புகார் அளித்த அன்றே போலீசார் என்னை விசாரித்தனர்.

**5-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 2 வருடம் வேலை பார்த்தேன். கடையில் 2 ஆண்கள், 2 பெண்கள் வேலை பார்த்தோம். பொதுவாக கடையில் உள்ள வெள்ளி, தங்க நகையில் கடையின் சீல் இருக்கும்.

கடையின் சீல் RD என்று இருக்கும் என்று போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் ஞாபகமில்லை. போலீசாரிடம் நகைகை அடையாளம் காட்டவில்லை. கேமராவில் பார்த்துதான் சொன்னேன். கேமராவை என்னுடைய முதலாளிதான் பார்த்தார். அதனால் நகையை யா்ரா எடுத்தார்கள் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. அந்த பெண் யார் என்று தெரியும். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லைஎன்றும் என் கடையின் உரிமையளாளருக்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1, 2, 4, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிகள் ஆஜரில்லை. வழக்கறிஞர் ஆஜர். கு. வி மு. ச பிரிவ 317ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டது. போதுமான காலஅவகாசம் அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து/கைரேகை பெறப்பட்டது.

Sd//////
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், பெருந்துறை.